
# துளிர்

CMG JAFFNA

வளர்ச்சி - 02 ஆடி - 2003 பிறப்பு - 07




## சிறுவர்களாகிய நாம் எப்போது துஸ்பிரயோகங்களிலிருந்து விடுபடுவது?

வெளியீடு
சிறுவர் ஊடகத்துறை
அன்பளிப்பு - 10.00

அன்புள்ள அனைவருக்கும்,

இவ்விதழ் தொடர்பான கருத்துக்களினையும்,
விமர்சனங்களினையும்,

துளிர் சஞ்சிகைக்கான ஆக்கங்களினையும்,

சிறுவர் ஊடகத்துறை குழுவுடன் இணைந்து
செயற்பட எண்ணுபவர்களும்




தொடர்பு கொள்வதற்கான எமது முகவரி

"துளிர்" சஞ்சிகை
வட இலங்கை 'பத்திரிகையாளர் சங்கம்,
இல.18, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

Book Designed by
mOuse

# பதிப்பாசிரியரின் பேனாவிலிருந்து......

யாழ் மாவட்ட சிறுவர்களில் பலர் தமது திறமைகளைக் காலத்துக்கு காலம் தமது அறிவுக்கு எட்டியவரை வெளிப்படுத்தத் தவறவில்லை. சந்தர்ப்பங்கள் அல்லது சாதகமான சூழ்நிலைகள் காணப்படாத போதிலும், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் அவர்கள் தமது நிலமைகட்கு ஏற்றவாறு திறமையாகச் செயற்பட்டும் உள்ளனர். அந்த வகையில் சிறுவர் ஊடகத்துறைகுழுவும் யாழ் மாவட்ட சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், எதிர்பார்ப்பினையும் பெரியவர்களுக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால், சமகாலத்தே பெரியவர்களாகிய நீங்கள் செய்வதெல்லாம் என்ன? உங்கள் கடமைகளினை ஏனோ தானோ என்ற மனநிலையில் செய்கின்றீர்களே அன்றி உங்கள் பிள்ளைகளினை மையப்படுத்திச் செய்கின்றீர்களா? என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். இன்னிலையில்,நான்கு கேள்விகளினை மட்டும் இங்கே கேட்கலாம் என்று நினைக்கிறோம்.

1.சிறுவர்கள் அதிகப்படியான நேரத்தினைச் செலவழிக்கும் இடமாகப்பாடசாலை திகழ்கின்ற போது பாடசாலையின் பிரச்சனைகளினை உரிய அதிகாரிகள் சிரத்தையுடன் அலசி ஆராய்ந்து தீர்க்க முயற்சிக்காதது ஏன்? (உதாரணமாக பாடசாலை அனுமதியின் போதான "டொனேஷன்", அதிகப்படியான தண்டனை, மற்றும் அதிகரித்து வரும் இடைவிலகல் எண்ணிக்கை)

2.சமகாலத்தே காலை உணவின்றி பாடசாலையில் மயங்கி விழும் சிறுவர்களது எண்ணிக்கை உயர்வடைந்து செல்லும் போது "புளியமரத்து வைரவருக்கும் வாகன வசதி" அவசியம் தானா?

3.எமது மாவட்ட பிரதிநிதிகள் என " தேர்தல் மூலம்" தெரிவு செய்யப்பட்டவர்கள் செய்து முடித்து விட்ட உருப்படியான சிறுவர் சம்பந்தமான திட்டங்கள் எத்தனை?

4.சமாதானத்திற்குப் பின்பு (அது நிரந்தரமோ தற்காலிகமோ என்பது வேறு விடயம்) வட கிழக்கே எந்நவொரு மாற்றத்தையும் பாரியளவில் எதிர்பார்க்க முடியாது போனாலும், இந்த அரசும் மற்றைய தரப்புகளுக்கும் சிறுவர்களது வாழ்க்கையில் (சிறுவர் இல்லங்களினை அதிகப்படியாத் திறந்து துஷ்பிரயோகம் செய்ததைத் தவிர " வாழ்வியல் மாற்றங்கள்" எவை?

இவை தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் குறித்து சிறுவர் ஊடகத்துறை குழு சில முன்னேற்பாட்டுத் திட்டங்களினை நடைமுறைப்படுவதாகத் திட்டமிட்டுள்ளது. அதன் படி பல அரச/ அரச சார்பற்ற தலைவர்களினையும் சந்திக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றிற்கு முன்பு தங்களிடத்தே மேற்படி கேள்விகள் தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இருப்பின் தாராளமாக வரவேற்கின்றோம்.

அன்புடன் ஆசிரியர்


**சிறுவர் ஊடகத்துறைக் குழு**

தலைவர்
எஸ்.ஹரன்

உப தலைவர்
கே.ரஜித்தா

செயலாளர்
ரி.பிரகாசினி

உப செயலாளர்
ரி.நவரட்ணம்

பொருளாளர்
யு.சங்கர்ஆனந்

ஆசிரியர்
ரி.அயந்தகுமார்

காப்பாளர்
கே.கலைச்செல்வன்
எஸ்.சிவறாஜினி

உறுப்பினர்
ஆர்.நளாயினி
ஆர்.மேரிஉஷா
எஸ்.றொபின்சன்



"துளிர்"
சிறுவர் ஊடகத்துறை
18, குமாரசுவாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


நாளைய நல்லுலகின் இன்றைய நல்வரவு

# எம்மையும் வாழவிடுங்கள்

சிறுவர்கள் நாங்கள் உரிமை
வேண்டி நிற்கும் வேளையிலே
எமது உரிமை என்னும் அரும்பினை
முளையிலே கிள்ளுகின்ற மானிடரே
செவி மடுப்பீர் எமது வாக்கை.

எமது இலட்சிய வாழ்வு தனில்
குறுக்கிட்டு எமது வாழ்வை
சீரழிக்கும் பெரியவர்களே!
எமது சிறுவர் படும் துயரம் எத்தனை?

கைதடி சிறுவர் இல்லமதில் நடந்தது என்ன?
எம் சிறுவர்கள் படும் துயரங்கள் தான்
எத்தனை எத்தனையோ
எம் சிறுவர்கள் சொல்லொனா
துயரத்தில் வாழ்வதை அறிவீரோ?



எமக்கு உரிமை வழங்கிவிட்டு
உதறித்தள்ளி எமது உரிமையை
பறிப்பது தான்உமது இலட்சியமோ?
எத்தனை எத்தனை உரிமைகள் எமக்கு
உள்ளதென்று மகிழ்ந்திருந்தோம்
அத்தனையும் பறிப்பது ஏனோ?

சிறுவர்கள் எங்களைச் சிதைத்து வாழ்வதற்கு
உங்கள் மனம் தோன்றியதும் ஏனோ?
சிறுவர் நாம் செய்த பாவம் தான் என்ன?
நம்மைச் சீரழிப்பது உமது இலட்சியமா?
நாம் வாழ நல்வழிப் படுத்த வேண்டிய
எம்மைச் சீரழிப்பதா உமது இலட்சியம்

பெரியோரே எம்மைச் சுதந்திரமாக
வாழ விடுங்கள் நாட்டிலே
எமக்கு விடிவு காலம் எப்போது?
நாம்வாழ நல்வழிப் படுத்துங்கள்
எம்மையும் வாழ விடுங்கள் உலகத்திலே
எமது இலட்சியத்தைக் காக்க உதவிடுவீர்

ஆக்கம் : சுபாறஞ்சினி

# பொது அறிவை வளருங்கள்

01) உலகில் மிகச்சிறிய கூடு கட்டும் பறவை எது?
02) பாம்புகள் இல்லாத நாடு?
03) முத்திரையில் தனது சின்னத்தை பதிக்காத நாடு?
04) தனது தேசியக் கொடியில் R என்ற எழுத்தை கொண்டுள்ள நாடு எது?
05) சிறிய இதயம் கொண்ட மிருகம்?
06) ரஷ்ய மொழி எந்த எழுத்தால் எழுதப்பட்டது?
07) மிக நீண்ட இரும்புப்பாதை பாலம் எது?
08) மிக வெப்பமான இடம் எது?
09) மிகப் பெரிய துறைமுகம் எது?
10) மிக உயர்ந்த கட்டிடம் எது?

ஆக்கம் - இ. மேரி உஷா
தரம். 10
( யா-புனித சென் ஜேம்ஸ் மகளீர் பாடசாலை )

விடைகள் 6ம் பக்கம்........

# மனிதனின் ஆயுள் அதிகமாவதற்கு

சாதாரணமாக இலங்கையில் வாழும் மனிதனுடைய சராசரி ஆயுட்காலம் 72 வருடங்கள். ஆனால் உலகின் வாழும் அனேக மக்கள் இன்னும் வாழவேண்டும் என எண்ணுவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் இன்னும் 10,15 வருடம் வாழ இதோ வழிகள்:

* ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவை மனநிறைவோடு உண்ணவேண்டும்.
* நாளுக்கு நாள் உணவு வித்தியாசப்படவேண்டும்.
* வாரத்துக்கு இரு முறை மீன் போன்ற கடல் உணவு சாப்பிடுவது நல்லது.
* தினமும் ஒரு வேளையாவது பால் அருந்த வேண்டும்.
* எப்போதும் உடல் இயங்கிக் கொண்டிருக்கவேண்டும்.
* தாகம் எடுக்கும் அளவிற்கு கடுமையான உடற்பயிற்சி வேண்டும்.
* சாப்பிடும் உணவில் அதிகமாக மாமிசக் கொழுப்பு இருக்கக்கூடாது.
* வாரத்தில் 2 அல்லது 3 தடவைக்கு மேல் அசைவம் சாப்பிடக்கூடாது.
* உடல் எடை அதிகமாகாது பார்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு கோபம் போன்ற உணர்ச்சிக்கு இடம் கொடுத்தல் ஆகாது.

ஆக்கம் - அ.தர்மிகா
A/L 2004 கலைப்பிரிவு
யா/மெ.பெ.உ.கல்லூரி

## யாழ் மாவட்டத்திலே சிறுவர் கல்வி, போஷாக்கும் சுகாதாரமும் சிறந்த முறையில் இருந்தால்................

யாழ்மாவட்டத்திலே தற்காலத்தில் சிறுவர்கள் பல வழிகளாலும் துன்பப்பட்டு வருகின்றமை தெரிந்த விடயமே. ஆனால் அதற்கான தீர்வுகள் இன்றுவரை முற்றாக நீக்கப்படவில்லை. இதன் அடிப்படையிலே இப்பிரச்சினைகள் யாவும் முற்றாக நீக்கப்பட்டிருந்தால் இன்று சிறுவர்கள் நல் அறிவு கொண்ட ஒரு சமுதாயத்தினை உருவாக்கி இருக்க முடியும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

கல்வி என்று கூறும்போது கடந்த கால போர் அனர்த்தங்களினால் பல சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அடிப்படைக் கல்வி வசதி கூட சிறுவர்களால் பெற முடியாமல் இருந்தமையை காணக்கூடியதாக இருந்தது. ஆனால் தற்காலத்திலே சமாதானம் என்ற வார்த்தையினூடாக போர் சற்று குறைவடைந்துள்ளது என்றே கூறலாம். இருப்பினும் இன்று கல்வி கற்பதில் பல சிறுவர்கள் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். இவர்களை இந்நிலையில் இருந்து மீட்டு அவர்களுக்கு இவ்வசதிகளை கொடுத்தால், எதிர் காலத்தில் அவர்களும் தலைநிமிர்ந்து சிறந்த ஒரு பிரஜையாக வாழமுடியும்.



படித்துப் பல பட்டங்களையும் பெற்று திகழ் வார்கள், வாழ்வில் சிறப்பாக வாழ முடியும். கற்றவர் களிற்கு சென்ற இடமெங்கும் சிறப்பு என்ற வார்த்தைக்கு பெருமைகிட்டும். சமூகத்தில்இருந்து புறக்கணிக்க முடியாது வாழமுடியும்.

அடுத்து சிறுவர் துஷ்பிரயோகம் என்று நோக்கும் போது, சிறுவர்கள் மீதான பாலியல் பலாத்காரம், தண்டனைகள், மூலம் தவறான பாதைக்கு சிறுவர்களை இட்டுச் செல்லுதல், வேலைக்கமர்த்தல் என்ற பல பிரச்சினைகள் இன்று காணப்படுகின்றன இவையாவும் களையப்பட வேண்டியவை. இவ்வாறு இப்பிரச்சினைகள் நீக்கப்பட்டால் சிறுவர்கள் சுதந்திர பட்சிகளாக நடமாட முடியும். வளர்ந்தவர்கள் சிறுவர்களை அன்பாக பார்ப்பார்களாயின் சிறுவர்கள் சிறப்புடன் வளரமுடியும் எதிர்கால சிற்பிகளை இன்றே உருவாக்க முடியும். சிறுவர்களை வேலைகளுக்கு அமர்த்தாவிடில் அவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களாக இல்லாது வாழ்வார்கள்.



அடுத்து சுகாதாரமும் போஷாக்கும் என்று பார்க்கும் போது இன்று சுகாதாரம்

தொடர்ச்சி 16ம்பக்கம்...

## சிறுவனாகிய நாம் பெரியவர்களான உங்களிடம் எதிர்பார்ப்பது !

* சிறுவர்களாகிய எங்களை ஒரே பாடசாலையில் படிக்கவிடுங்கள்! ஏன் நீங்கள் பாகுபாடு காட்டி உயர்ந்த பாடசாலை, தாழ்ந்த பாடசாலை என காட்டி எம் மனதை நோக வைக்கின்றீர்கள்?

* "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" என் கூறுகிறீர்கள் ஆனால் உயர் குல சிறுவர்கள் யாராவது தாழ்ந்த குல சிறுவர்களோடு சேர்ந்து கதைத்தால் உடனே வீட்டில் எம்மையெல்லாம் அடித்து உதைக்கிறீர்கள். நாம் படும் பாட்டை நீங்கள் உணர்வீர்களா!?

* அன்பான பெரியவர்களே! நீங்கள் அறிவாகத்தான் செயற்படுவீர்கள் என் நாம் நம்புகின்றோம். எனவே சிறுவராகிய எம்மீது சாதி,மதம், சமயம், உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, வறியவர் என்ற பாகுபாட்டை இனியாவது கைவிட்டு விட்டு சிந்தித்து செயற்படுங்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஆக்கம் : தே.டிலக்சன்
தரம் 6A
யா/நெல்லியடி ம.ம வித்தியாலயம்

---

## அரங்க மேம்பாட்டிற்கான பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் 2003.07.26 அன்று 9.30 மணியளவில் அரங்க மேம்பாடு என்னும் சிறுவர்களுக்கான நிகழ்வானது சிறுவர் பாதுகாப்பின் அனுசரணையுடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்விற்காக சிறப்பு விருந்தினராக பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த அரங்க விரிவுரையாளர் ஜோன் மாட்டின். சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களான மன்னாரை சேர்ந்த ரஞ்சித் அவர்களும் அநுராதபுரத்தை சேர்ந்த அசோக் அவர்களும் மட்டக்களப்பைச் சேர்ந்த பெனில் அவர்களும் சிறுவர் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சியாமலி அவர்களும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தற்பரன் அவர்களும் வருகை தந்திருந்தனர்.

பின்பு 9.45 அளவில் தியானத்துடன் நிகழ்சிகள் ஆரம்பமாகியது. இந் நிகழ்வில், சிறுவர் கழகத்திலிருந்தும் சிறுவர் தொடர்பாடல் குழுவிலிருந்தும், சிறுவர் ஊடகத் துறை குழுவிலிருந்தும் பலதரப்பட்ட மாணவர்கள் பங்கு பற்றினார்கள். பின் ஜோன் மாட்டின் அவர்கள் வந்து எமக்கு Good morning கூறி நிகழ்வினை ஆரம்பித்து, சில நிமிடங்களில் சிறு இடைவேளைக்கு பின் மீண்டும் நாடகப்பயிற்சிக்கு வேண்டிய முக்கிய விடயங்களை எமக்கு வழங்கினர். அதில் சில உங்களுக்காக...............

* தலைக்கான பயிற்சி
* கழுத்திற்கான பயிற்சி
* கால்களிற்கான பயிற்சி
* இடுப்பு பகுதிக்கான பயிற்சி
* முக பாவனை, அபிநயம், குரல்வளம்


என்பவற்றிற்கான பயிற்சி வழங்கப்பட்டன பின் மதிய உணவின் பின்பு சிறு தலைப்புக்கள் வழங்கி 6 பேர் கொண்ட குழுக்களாக பிரிக்கப்பட்டு நாடகங்கள் 20 நிமிடத்தின் பின் மேடையேற்றப்பட்டு 4.00 மணியளவில் இனிது நிறைவேறியது.

ஆக்கம் : சி. சிவகுமார்
(சிறுவர் ஊடகத்துறை)

# சமுதாயத்தால் அழியும் சிறுவர்கள்

இன்றைய சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை நாம் அதிகமாக காணலாம். ஒரு குழந்தை தாயின் கருவிலிருந்து எப்பொழுது வெளி உலகத்திற்கு காலடி எடுத்து வருகின்றதோ அப்பொழுதிலிருந்து அந்தக் குழந்தை பல பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறான பிரச்சினைகள், கஷ்டங்கள், நம்பிக்கையின்மை, மனவேதனைகள், கொலை, கொள்ளைகள், உள்ள உலகில் நாம் வாழ்கின்றோம்.

வளரும் இளம் சமுதாயத்தை பற்றி சமூகம் நினைக்கின்றதா? இதனால் அவர்கள் அழிந்து போகின்றார்கள்.இது எவ்வாறு என்று நோக்குவோமானால், ஒரு குடும்பத்தலைவன் கெட்டவனாக இருந்தால் அது அவருடைய குழந்தையைத்தான் பாதிக்கும் ஆனால் அந்தக் குழந்தையும் தாயும் நல்லவர்களாக இருந்தாலும் அவர்கள் வாழும் சமுதாயம் எல்லோரையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்ப்பதால் அந்தக் குழந்தையின் மனதில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல அந்த சிறுவனை வேறுபல சிறுவர்கள் தம்முடன் சேராமல் ஒதுக்கி வைப்பார்கள். ஆகவே கூடுதலாக சிறுவர்கள் கெட்டவர்களாக உருவாக இந்த சமுதாயம் வழிவகுக்கின்றது.



அதுமட்டுமல்ல, ஒரு சிறுவன் மிகவும் கஷ்ரத்தில் வளர்வானாகில் அவன் தனது கஷ்ரத்தை தீர்ப்பதற்காக பல தீய வழிகளில் ஈடுபடுவான். தீய வழி என்றால் கொலை செய்தல் கொள்ளை அடித்தல் போன்றவற்றில் ஈடுபடுவான் அத்தோடு சேர்ந்து பல சிறுவர்களை அதே வழிக்கு அழைத்து செல்வான். இதனால் அந்த இடத்தில் உள்ள சிறியவர்கள் தீயவர்களாகவே இருப்பார்கள்.

மேலும் இதை விட பல சிறுவர்கள் சமுதாயத்தாலும் பெற்றோராலும் அவர்கள் வாழும் சூழலாலும் தீய வழிக்கு அழைத்து செல்லப்படுவார்கள் இதைககண்டும் எமது சமுதாயம் எதுவும் செய்யாமல் நமக்கென்ன என்று நினைக்கிறார்கள். இதனால் தான் எமது சமுதாயம் அழிந்து போகிறது பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் எனவே எமது இளைய சமுதாயம் அழிந்து போகாமல் அதை பாதுகாக்கப் பாடுபட வேண்டும்.

ஆக்கம் : பே.ஆன்றூபினி.

---

3ம் பக்க விடைகள்...........

01) கம்மிக்சிட்டு
02) அலாஸ்கா
03) பிரித்தானியா
04) உகண்டா
05) சிங்கம்
06) க்ரைவிக்
07) கீழ் ஜாம்பஸி பாலம், சோன் பாலம் (ஆபிரிக்கா, இந்தியா)
08) அஜிஜியா
09) நியூயார்க் (நியூஜெர்ஸி)
10) சீயர்ஸ்டவர் (சிகாகோ)

# முடிவுக்கு வருமா?

அறுகு போல் வேரூன்றிய
எம் கல்வி
ஆல்போல் ஆகும் என
கனவு கண்டோம்
பாடசாலை புகுவதில்
ஒரு சிறு மாற்றம்
ஆனால்.......
நமக்கு பெரும் ஏமாற்றம்
ஆம்
தரப்படுத்துகை
ஓடியன ஆண்டுகள்
பற்பல மாற்றங்கள்
கல்வியில்
மாணவ மணிகளின்
சிந்தனை கவிழ்ந்தது, புரண்டது
எனினும்
துன்பத் தொடர்ச்சியில்
ஓர் இன்பத் துளி
இலவசப் பாட நூல்
எனினும்........
தொடர்ந்தன
செல்கள், பொம்மர்கள்
மூடியன
கல்விக்கூடங்கள்
அழிந்தன
நம் கல்வி வருடங்கள்
பிந்தி ஓடுகின்றன
ஆனால்
வயதுகள்
முந்தி ஓடுகின்றன
படித்தவர்கள் பாய்கின்றார்கள்
வெளிநாடு
கடக்கின்றன காலங்கள்.............

ஆக்கம் : அ.டிலக்சன்


# துருவங்கள் பற்றி......

நில அச்சின் இரு முனைகளிலும் வட, தென்துருங்கள் அமைந்துள்ளன. இவ்விரு துருவங்களும் ஒரே இயற்கையமைப்பாக உள்ளன என்று மக்கள் நினைப்பதுண்டு. ஆனால் அது உண்மையன்று. இரு துருவங்களைப்பற்றிக் கண்டுபிடிக்க முடியாத இரகசியங்கள் அனேகம் உள்ளன என்று பல விஞ்ஞானிகள் கூறுகின்றனர். வட துருவத்தைச்சுற்றியுள்ள நிலப்பகுதியை ஆர்க்டிக் பகுதி (Arctic region) என்றும், தென் துருவத்தைச்சுற்றியுள்ள நிலப்பகுதியை அண்டார்டிக் பகுதி(Antarctic region) என்றும் கூறுவர்.

தென் துருவத்தைச்சுற்றி, அண்டார்க்டிக் பகுதி என்பர் இப் பகுதியில் கடும் குளிர் காணப்படுகிறது.இப் பகுதி உலகிலேயே அதிக குளிருள்ள பகுதியாகும்.இப் பகுதியில் அதிகமாகபனிக்கட்டிகள் காணப்படுகின்றது.இப் பகுதியில் 75$^0$C இல் இருந்து 40$^0$C வரை வெப்பம் வேறுபடுகிறது. கோடைக் காலத்திலும் சராசரி வெப்பநிலை நீரின் உறை நிலைக்குக் கீழே காணப்படுகிறது. பென்குயின்(Penguin) போன்ற பறவைகள் இப் பகுதியில் காணப்படுகின்றது. சில பூச்சிகளும் காணப்படுகின்றது. இப்பகுதி ஒரு வருடத்தில் முதல் ஆறு மாதங்கள் முழுமையான இருட்டையும் கொண்டுள்ளது. இப்பகுதியில் லைக்கன்ஸ்(Lichens), மாசஸ்(Mosses), புல்கள்(Grasses) மற்றும் சில தாவரங்களும் காணப்படுகின்றது. பல விஞ்ஞானிகள் செய்த ஆராச்சியின் படியும் இங்கு கிடைத்துள்ள சில புதைபொருட்களின் (Fossils) அமைப்புக்கள் பற்றிய ஆராச்சியின் படியும் இப் பகுதி ஒரு காலத்தில் வெப்பப் பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்றும் அங்கு பல தாவரங்கள் வளர்ந்திருக்க வேண்டும் என்றும் தெளிவாகிறது.

நன்றி - தெரிந்தும் தெரியாததும்

# பூவுலகமும் வான்வெளியும்



கடந்த இதழ் தொடர்ச்சி...

அந்த நட்சத்திரம் நம்மிடமிருந்து எட்டப்போகிறது என்று வைத்துக் கொள்வோம்,அப்போது ஒளி அலைகளின் எண் குறைகின்றது. ஒளி அலைகளின் எண் மிகுதியாக வந்தாலும் அந்த நட்சத்திரத்தில் நிற மாலை உள்ள கோடுகள் இடம் பெயருகின்றன. அந்தக் கோடுகள் நிறமாலையின் ஊதா நிறப்பகுதியை விட்டு இடம்பெயருமானால் அந்த நட்சத்திரம் நம்மிடமிருந்து எட்டப் போகிறது என்பது தெளிவு. இக்காலத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நிறமாலைக் காட்டி கருவிகள் மிக மிக துல்லியமாக இயற்றப்பட்டவை. ஆகையால் நிற மாலையின் வலது புறக் கோடியையும் ஒப்பிட்டு பார்த்து அவற்றின் அமைப்பின் வேறுபாட்டை கொண்டு அந்த நட்சத்திரத்தின் சுழற்சியை கூட அளந்தறிய முடியும். விண்வெளியில் மிக தொலைவிலுள்ள பிரதேசங்களையும் கூட மேஜையின் மீது வானத்தை படிய வைத்து விட்டது. பிரபஞ்சத்தின் விரிவையும் அதன் மாட்சிமையும் பற்றி மக்களுக்கு கலீலியோ ஓரளவுக்கு விளக்கினார். ஆயினும் 19ம் நூற்றாண்டில் நிறமாலைக் காட்டியும்,டெலஸ்கோப்பும் நன்கு வளர்ச்சி பெற்ற பின்புதான் பிரபஞ்சம் என்பது உண்மையில் எவ்வளவு பெரியது என்பதை மக்கள் கண்டு கொண்டார்கள். நட்சத்திரங்கள் நம்மிடமிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையை தீர்ப்பது என்று 1938 ஆம் ஆண்டில் ஜேர்மன் வானியல் நிபுணரான பிரிட்டிக்பெஸ்ஸல் என்பவர் துணிவு கொண்டார். ஸிக்கனை (ஸிக்னல் எனும் நட்சத்திரம் நட்சத்திர மண்டலத்தின் 61ஆவது நட்சத்திரமாகும்) என்பது நமது பூமியில் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்பதை அளக்க முற்பட்டார். நைல் நதியில் வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளை அளப்பதற்கு பழங்கால எகிப்திய நில அளவு அலுவலர்கள் கோடுகள் வரையாமல் கற்பனையாக முக்கோணங்களை வரைந்து கணக்கிட்டதை போல அவரும் கணக்கிட்டார். வானத்திற்கு குறுக்கே பெஸ்ஸல் கற்பனை முக்கோணங்களை வரைந்தார்.

## சிறுவர்களே!

ஒக்ரோபர்1சிறுவர்தினமாகும். எனவே, சிறுவர்உரிமைகள், துஸ்பிரயோகங்கள் தொடர்பான உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும். ஆக்கங்கள் வந்து சேர வேண்டிய முகவரி......

சிறுவர் ஊடகத்துறை குழு
18, குமாரசாமி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

# எமக்கு சமாதானம் கிடைத்தால்........

தரம் 10ல் கல்விகற்கும் இரு மாணவர்களிற்கிடையில் நடைபெறும் சமாதானம் பற்றிய கலந்துரையாடல்

சாந்தி : ஆஷா குட்மோனிங்

ஆஷா : குட்மோனிங்

சாந்தி : இன்றைய பத்திரிகை வாசித்தனீரா? இதில் நிரந்தர சமாதானம் பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என போடப்பட்டிருக்கிறது.

ஆஷா : நான் வாசிக்கவில்லை. ஆனால் நிரந்தர சமாதானம் எமக்கு விரைவில் கிடைக்குமா?

சாந்தி : ஆம் நிட்ச்சயமாக கிடைக்கும் நாம் எல்லோரும் ஒன்று திரண்டு செயற்பட்டால் முடியாதது ஒன்றுமே இல்லை.

ஆஷா : எப்படியான சமாதானம் எதிர்பார்க்கின்றாய்?

சாந்தி : தமிழர், சிங்களவர், முஸ்லீம் என்ற இன,மொழி, மத வேறுபாடின்றி எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் என்ற உணர்வோடு ஒற்றுமையாக வாழவேண்டும். அத்தோடு இன்று எமக்கு கிடைக்கும் துன்பங்களும் கொடுரங்களும் இனிவரும் காலங்களில் எந்தவொரு சிறுவர்களும் எதிர்நோக்காத வண்ணம் ஏற்படும் நல்லின சமாதானத்தையே நான் விரும்புகிறேன்.

ஆஷா : சாந்தி நீ சொல்வது போல சமாதானம் எமக்கு கிடைத்தால் எதிர்கால சிறுவர்களின் வாழ்வு குன்றிலிட்ட தீபம் போல் ஒளிமயமாகும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு எல்லா இனச்சிறுவர்களினது உரிமைகள், கடமைகள், எதிர்பார்ப்புக்கள், நிச்சயமாக கிடைக்கும். இலங்கைத்தீவிலே வாழும் பல்லினச் சிறுவர்களும் சுகந்திரமாகவும் இனவிரோதமின்றி நாட்டின் நற்பிரஜையாக மிளிர சமாதானம் நிச்சயமாக வழிவகுக்கும். கடந்த காலத்தில் நடைபெற்று ஓய்ந்த யுத்தத்தினால் எத்தனையோ சிறுவர்கள் கால்கள் இழந்து, பெற்றோர்களை இழந்து வீடு வாசல் இல்லாமல் தெருவிலே வாழ்க்கைக்காக போராடுவதை நாம் இன்றும் பார்க்கின்றோம். இந்த நிலை மாறவேண்டுமாயின் எக்காலத்திலும் இவ்வாறான துன்பம் சிறுவர்களுக்கு ஏற்படாமல் இருக்கும் வகையில் சிறந்ததொரு சமாதானம் வேண்டும். இச்சமாதானம் ஏற்பட்டால் எனக்கு மட்டுமல்ல இந்நாட்டிலுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் கிடைத்த நற்பேறாக கொள்வோம்.

சாந்தி : நீர் சொல்வதை கேட்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நாம் நினைப்பது போல சமாதானம் கிடைக்க வேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன். நேரமாகிவிட்டது சமாதானம் பற்றிய கலந்துரையாடல் ஆரம்பமாக போகிறது. வாரும் செல்வோம்.

(இருவரும் வகுப்பறையை விட்டு வெளியேறுகின்றனர்)

ஆக்கம் : சி.யமுனாளினி
வா. கிருபானந்தி


பகத்ஜீ
பகத்ஜீ எனது புததகத்தை வாங்கி ஒரு மாதமாகிறது, கூடாதபழக்கம் இதுவரை திருப்பி ஒப்படைக்கத் தெரியவில்லை நானே போய் புத்தகத்தை எடுத்து வர வேண்டும்.
இராமன் வருகிறார் தன்னுடைய புத்தகத்தை எடுப்பதற்கு. எனக்கு இரவல் பெறும் பொருட்களை திருப்பிக் ஒப்படைக்கும் பழக்கமில்லை. அவரைக் கதைத்து சமாளிப்போம்.
பகத்ஜீ எனது புத்தகத்தை தரவும்.
இராமா! இதோ பார் எனது நாய் எவ்வளவு புத்திசாலி பாரும்
சப்பு! செய்தித்தாளை எடுத்து வா!
மிகவும் சாமர்த்தியம்

1141

சிறுவர் ஊடகத்துறைக் குழு
இல 18, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
e-mail- cmgjaffna @asia.com

## "துளிர்" சஞ்சிகைக்கான சந்தா விபரம்

1. முழுப்பெயர் :.....................................................
2. முகவரி :.....................................................
3. அஞ்சல் முகவரி :.....................................................
4. தொ.பே.இல :.....................................................
5. சந்தா விபரம் :.....................................................
6. அஞ்சல் விபரம்

| | |
|---|---|
| பதிவுத்தபால் | |
| சாதாரண தபால் | |

7. அங்கத்தவராயின் அங்கத்துவ இல :.....................................................
8. பிற விபரங்கள்

| | |
|---|---|
| அலுவலகம் (தொலைபேசி இல) | |
| தொலைநகல் (Fax) | |
| மின்னஞ்சல் (e-mail) | |

---

**அலுவலக பாவனைக்கு மட்டும்**

மேற்படி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டது.

காரணம் :.....................................................

| | |
|---|---|
| அலுவலகம் (தொலைபேசி இல) | |
| தொலைநகல் (Fax) | |
| மின்னஞ்சல் (e-mail) | |

**அலுவலக பாவனைக்கு மட்டும்**

மேற்படி விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது / நிராகரிக்கப்பட்டது.

காரணம் :........................................................................................................

பற்றுச்சீட்டு இல :..................................................................................................

................................ ................................


திகதி கையொப்பம்

**சந்தா விபரம்**

குறைந்தது 1 வருடத்திற்கானது.

| | |
|---|---|
| 12 மாதம் x 1 சஞ்சிகை x ரூ10/- | = 120.00 |
| தபால் செலவு | = 80.00 |
| மொத்தம் | = 200.00 |
| பதிவுத்தபால் எனின் | = 300.00 |

குறிப்பு : 1 வருடத்திற்கு மேற்பட்ட வருடக் காலப்பகுதிக்கு சந்தாதாரர் ஆகுவோருக்கு 10% விசேட கழிவாக வழங்கப்படும்.


சப்பு! எனது சப்பாத்துகளை எடுத்து வா!
மிக நன்று.
சூடான தேனீர் பருகுங்கள்.
சப்பு! அடுத்த அறையிலிருந்து ஸ்ருலை (ரீப்போவை) கொண்டு வா தேனீரை வைப்பதற்கு.
எனது புத்தகம் அந்த ஸ்ருலின் மேல் உள்ளது.

# புரியாதோ.....

ஆக்கம் - கி.கலைச்செல்வன்.

அனல் கொதிக்கும் வெய்யிலிலும் தீராத தண்ணீர் விடாயிலும் ஓடோடி அந்த பாதை வழியே சென்றான் ஜனனன். என்ன கொடுமையப்பா அந்த ஊரில் ஆம், வீதிக்கு உட்பக்கம் அந்த ஊர். ஊரில் படித்தவர் சிலர் படித்தும் கூட திருத்த முடியாத பலர் வாழும் ஊரது. ஜனனனோ அதைப் பார்த்து வியப்புறுகிறான்.

வியக்க வைத்த விடயம் என்னவெனில் பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய பிள்ளையின் கையில் கசிப்புப் போத்தல். மறுபுறம் பார்த்தால் சீட்டாடும் குழுக்கள். இன்னொரு புறம் விறகு விற்கும் சிறுவன். இன்னொரு புறம் தந்தையின் கொடுமையால் அவஸ்தையுறும் சிறுவன். இப்படியே ஒவ்வொரு புறமும் ஒவ்வொரு குற்றச்செயல்கள் இதைப்பார்த்த ஜனனன் இதை யாருக்காவது சொல்ல வேண்டும் என நினைத்தான்.

ஓடோடி சென்று தன்னுடைய நண்பன் சனத்திற்கு சொல்கிறான். பிரச்சினையை கேள்விப்பட்ட சனத் இதனால் ஒன்றுமே ஆகப்போவதில்லை. நீ உன்னை பாதுகாத்து கொள் அதுவே உனக்குபோதும் என்றான்.



டேய் கண்டும் காணாத மாதிரி போனால் என்னடா நிலமை? சரி அதற்கு அவர்கள் மிருகத்தனம் உள்ளவர்களடா யாரிடம் இதனைப் போய் சொல்லப்போகிறாய்.

சனத் நீ என்னுடன் வா ஊர்ப் பெரியவர்களிடமும் பெற்றோரிடமும் சொல்வோம். சரி வா உன்னை ஏன் குழப்புவான் சரிவா போவோம். இருவரும் சென்று பெரியவர்களிடம் கூறவே தம்பிமாரே எங்களிற்கு எங்கட வேலை தெரியும் நீங்கள் ஒழுங்காக இருக்கவேண்டும் என்றால் இதைப்பற்றி கதைக்காமல் ஒழுங்கா வீட்டிற்கு போங்கோ என்றனர்.

டேய் வாடா. இதற்குப் பிறகும் நிற்கணுமா? வாடா போவம் என சனத் ஜனனனை இழுத்து சென்றான். ஜனனனிற்கோ ஆத்திரமாய் வந்த போதும் மீண்டும் சிறுவர்களுடன் கதைக்க ஆசைப்பட்டு அவர்களுடன் கதைக்கிறான்.

தம்பி! உங்களை யார் இந்த பழக்கத்தை பழகச் சொன்னது. நீங்கள் இந்நாட்டின் எதிர்கால தலைவர்கள் இப்படி நீங்கள் சீட்டாட்டம், கசிப்புவிற்றல், விறகு விற்றல் என்று இருந்தால் உங்களுடைய கல்வி, கலை, கலாச்சாரம் என்னடா ஆகும். உங்களையும் நீங்கள் அழித்து உங்கள் கிராமத்து வளத்தையும் சேர்த்துதானே நீங்கள் அழிக்கிறீர்கள்.

இஞ்ச பார் வந்திட்டார் அமைச்சர் என சீறிச்சினந்து அவர்களை சொல்லத்தகாத வார்த்தைகளால் எல்லாம் திட்டினார்கள். போதாதற்கு அவர்களுடைய பெற்றோரும் அவர்களுக்குச் சார்பாகவே பேசினார்கள். இதனைப் பார்த்த ஜனனன் மனம் உடைந்து கலங்கிய கண்ணீர் விழி வழியே ஓடும் முன்பே அவ்விடத்தை விட்டு நண்பனை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கி புறப்பட்டான்.


# வெடி பொருட்களால் ஏற்படும் பாதிப்புக்கள்

உலகில் தற்போது இடம்பெறும் ஆயுத மோதலில் சிக்கி இருக்கும் இலட்சக்கணக்கான பிள்ளைகளுக்கு சொல்லொண்ணாத் துன்பத்தை விளைவிக்கும் அதிநாசகரமான, தொடர்ச்சியான ஆபத்துக்களைக் கொண்டு விளங்குபவற்றுள் ஒன்றே நிலக்கண்ணி வெடிகள் ஆகும். மோதல் முடிவுற்ற நீண்ட காலத்துக்குப்பிறகும் நிலக்கண்ணி வெடிகள், வெடிகள் என்பன செயலிழிக்காமல் இருக்கும்.

இன்று குறைந்தது 68 நாடுகளில் 11 கோடி நிலக்கண்ணி வெடிகள் நிலத்தில் புதைந்து கிடந்து கவலையீனமாக பிள்ளைகள் எப்போது காலை தூக்கி வைக்கப் போகின்றார்கள் என்பதை கவனித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றோடு வெடிக்காத வெடிகள் இலட்சக்கணக்கானவை உள்ளன.

தற்போதைய உலகில் குறிப்பாக சிறுவர்கள் ஆபத்தில் உள்ளார்கள். சிறுவர்கள் இயற்கையிலேயே புதினமான வெடிபொருட்கள் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டவர்கள். வெடிபொருட்களில் பல விளையாட்டு பொருட்கள் உண்டு. இவற்றில் அன்னாசி, வண்ணாத்திப்பூச்சி போன்ற, வடிவங்களிலும் இருக்கும். மிருகங்களை மேய்க்கும் போது அல்லது வயல்களில் வேலை செய்யும்போது அல்லது விறகு தேடும் போது சிறுவர்கள் இத்தகைய வெடிபொருட்களைப் பொறுக்கி எடுக்கலாம் அல்லது ஏறிமிதித்து விடலாம். நிலக்கண்ணி வெடிகளைப்பற்றி எச்சரிக்கை செய்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தாலும், சிறுவர்கள் அத்தகைய அடையாளங்களை இனங்காணவோ, வாசிக்கவோ இயலாதவர்களாக இருப்பார்கள். சிறுவர்களும் பெரியவர்களும் நிலக்கண்ணி வெடிகளுமக்கு அவ்வளவு பரிச்சயமாவதால், அது பயங்கரமான ஆயுதங்கள் என்பதனை அவர்கள் மறந்து விடுவது ஓர் ஆபத்தாகும்.

ஆக்கம் : தரன்



மிதிவெடி அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பகுதி ஒன்றினை படத்தில் காணலாம்.



மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள பிரதேசம் ஒன்றில் அபாய அறிவிப்பு பலகை இடப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# முதலுதவிமுறை

## நஞ்சுகள்

உடலினுள் விஷம் பின்வரும் முறையில் பரவுகின்றது.

1.நுரைமீரல் வழியாக வாயு வடிவில் உட்சுவாசிக்கப்படலாம். (நஞ்சுப்புகைகள்)

2.வாயின் ஊடாக - திண்மம், திரவ வடிவில், விழுங்குதல் (மண்ணெண்ணை, அலரிவிதை)

3.தோலின் ஊடாக - குத்துதல், கடித்தல் மூலம்

### சாதாரண சிகிச்சை முறை

1.நடந்த விடயங்களை வைத்தியரிடம் விளக்கமாக கூறுதல்

2.மீதியான விஷம் குப்பி ஆகியவற்றை வைத்தியரிடம் ஒப்படைத்தல்

### நோயாளி சுயாதினமுற்று இருத்தல்

குப்பிறப் படுக்க வை.

வாந்தி எடுப்பின் மூக்கால் குப்குற படுக்க வை.

மூச்சுவிடக் கஷ்டப்படின் செயற்கைச் சுவாசம் கொடு

தன்னறிவு இருப்பின் வாந்தி எடுக்கச் செய்

(கரண்டி அல்லது விரலை உபயோகித்து அல்லது ஒரு ரம்ளர் நீரில் 2 தேக்கரண்டி உப்பைக் கரைத்து குடிக்கக் கொடுத்தல்)

### வாந்தி எடுக்கச் செய்யாதே

தன்னறிவு இல்லாதிருப்பின்

உதடு வாய் வெந்திருப்பின்

காரமாயின் அமிலத்தையும் அமிலமாயின் காரத்தையும் நீரில் கரைத்து குடிக்கக் கொடுத்தல்

அதிகளவு தண்ணீரை குடிக்கக் கொடுத்தல்

பால், பார்லி, தண்ணீர் பச்சை முட்டை தண்ணீருடன் நன்றாக்கலந்த மா.

### பொதுவான விஷங்களும் சிகிச்சை முறைகளும்

கீழ் தரப்பட்ட அளவு முறையில் 2 - 8 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு அரைவாசியும் 2 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு கால்வாசியும் கொடுத்தல் வேண்டும்.

### அமிலம்

வாந்தி போகச்செய்தல் ஆகாது. அதிகளவு நீரைக் குடிக்கக் கொடுக்க வேண்டும். 2 மேசைக்கரண்டி சோக் மில்க் ஒவ்மக்னீசியாவை 1 பைந் நீரில் கரைத்துக் கொடுக்க வேண்டும்.

### கார நஞ்சு

வாந்தி எடுக்கச் செய்யாதே அதிகளவு தண்ணீரைக் குடிக்கக் கொடு அல்லது 2 மேசைக்கரண்டி எலுமிச்சைச் சாறு. அல்லது சித்திரிக் அசிட் இவற்றுள் ஒன்றை ஒரு பைந் நீரில் கரைத்து குடிக்கக் கொடு.




### நஞ்சு ஊட்டலின் சிகிச்சையின் குறிக்கோள்

நஞ்சு உட்புகுவதை தாமதிக்கச் செய்தல்


இயலுமாயின் நஞ்சை அகற்றுதல்

# சிறுவர்களே


# நீங்களும் முயன்று பாருங்கள்





எஸ்.பிரசாந்தி



பா.பிரதாஸ்



கெ.உதயா பிரகாசினி



ச.ரொனிபகீரதன்

## குறுக்கெழுத்துப்போட்டி 1 இற்கான விடை


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 ர | 3 ச | ம் | | 4 க | 5 மு | 6 கு |
| 7 வா | ச | ம் | | 8 இ | ரு | ட் | டு |
| 9 த | ம் | ப | 10 தி | | 11 மா | ட | ம் |
| ம் | | 12 வ | ரு | 13 ம | தி | | ப |
| | 14 அ | ம் | ம | ன் | | 15 நா | ம் |
| 16 உ | ண் | | 17 தி | ன | 18 ச | ரி | |
| 19 த | ண | ல் | | 29 வ | ன் | | 21 சா |
| 22 வி | ல் | | 23 த | ன் | னி | றை | வு |

# சிறுவர்களே!

# வாசிப்பதன் மூலம் எமது அறிவை வளர்ப்போம்

ஒரு மனிதன் பேசத் தெரியும் முன்பே அவன் கைஅசைவினாலோ அல்லது சைகையினாலோ தகவல் ஒன்றைப் பெற்றுக் கொள்கிறான்.

ஆனால் அவன் வாசிப்பதற்கு பல எழுத்துக்களும் சொற்களும் மிக முக்கியமானது. கண்டதைக் கற்றவன் பண்டிதன் ஆவான் என்ற பழமொழிக்கு இப்போது எதிர்மாறாக நடக்கின்றது. இவ்வாறு கண்டதைத் தின்று பண்டியன் ஆகின்றானோ ஒழிய கண்டதையும் கற்று பண்டிதன் ஆகின்றார்கள் இல்லை. இப்போது பல நவீன மாயங்களுக்கு உட்படும் மனிதன் ஒரு கல்வியில் அக்கறை காட்டும் போது அவன் ஒரு சொற்பொழிவாளனாகவோ அல்லது ஒரு எழுத்தாளனாகவோ மாறக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.



வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணமடைகிறான் என்பதை ஏற்றுக் கொள்ளாத படியினால் கிணற்றுத் தவளை போல் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். ஏனென்றால் அவர்கள் வாசிக்கத் தெரிந்தும் வாசியாத படியினால் உலகில் நடப்பவை பற்றி அறியாது தானும் தனது குடும்பமும் ஒரே வீட்டுக்குள் கிணற்றுத்தவளை போன்று மூழ்கிக் கிடக்கிறார்கள். வாசிப்பது என்று கூறிக் கொண்டு பல தீயபுத்தகங்களை வாசித்து கெட்டுப்போவது நல்லதன்று. ஒரு மனிதன் வாசிக்கும் எப்பொருளும் அவன் உயர்வடைய காரணமாக இருக்க வேண்டுமே ஒழிய அவனை அப்புத்தகங்கள் தீயவனாக மாற்றக் கூடாது.



இவ்வாறு பல நன்மைகளை எங்களுக்குப் பெற்றுத் தரும் வாசிப்பு செயற்பாட்டை நாம் எமது வாழ்வில் பின்பற்றி நல்ல பயனை பெற வேண்டும்.

ஆக்கம் : தே.கிறசன்சியா
சிறுவர் ஊடகத் துறை

---

4ம் பக்க தொடர்ச்சி..............

பெரும்பாலும் சீரழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. பொது இடங்கள், நிலையங்கள், கிராமங்கள் என்று பல இடங்களிலும் சுகாதாரமான வசதி குறைந்துள்ளது. இந்நிலை மாறுமாயின் சுகாதாரம் சீரழியாது ஆரோக்கியமான சுகவாழ்வைப்பெற்று வாழலாம். நோய்கள் இன்றி வாழலாம் போஷாக்கான உணவுகளை விட்டு ஏதோ சாப்பிட்டால் சரி என்று நினைப்பதை விட்டு நல்ல சத்துள்ள உணவுகளை சேர்த்துக்கொள்ளல் அவசியமாகும்.

இவ்வாறு இப்பிரச்சினைகள் இல்லாது சிறந்த ஒரு நாடு உருவாக யாவரும் முன்வர வேண்டும். இது நடைபெறுமாயின் சுபீட்சமான நாட்டை உருவாக்க முடியும் என்று கூறுவதில் சந்தேகம் இல்லை.

ஆக்கம் : சி. பிரசாந்தி
சிறுவர் ஊடகத் துறை

# Global Warming

**What's being done about it?**



The united Nations has meeting where world leaders agree on what do about global warming.

Every five years, the Earth summit happens.in1997, an agreement was made at the UN Conference on Climate Change in Kyoto, Japan,to cut the amount of gases that industries make.

Leaders agree the world can cut the amount of carbon dioxide that's released in to the atmosphere by changing the way power is produced too.

in February 2003,the British government set out its plans to produced electricity using 'greener' ways.

**What can do?**



There are way you can help cut green house gases and help stop global warming.There simple things,but can make a diference if everyone dose them!

Re-cycle glass bottles,jars,newspaper and magazines and tin cans.Save them and take them to logal re-cycling centres.

Re-use plastic shopping bags and envelopes don't get new ones.

persuade your mum or dad (or whoever dose the gardening)to have a compostheap.

Put abrick in a plastic bag in to your toilet cistyern then the toilet will use less water each times you flush.Don't worry that's plenty of water to get rid of......

Use paper on both sides.Try and buy products that don't use much packaging.

Give unwanted gifts and cloths to a charity shop.

Only fill the kettle up with the amount of water you need to boill that time.

Don't leave the TV or video on standby.

if you get lift to school in a car,take your mates along for the ride.

Ask whoever dose your wasing to use the machine at 40 degrees, this helps conserve power.


Switch lights off when you're not in the room

Get a clock work mobile phone recharger

Cycle to places!

Have showers instead of boths.

**Wave power**



Waves can produce energy eithgy either off-shore or on coastline plants

Wave technology is still experimental.

if works using waves to trapto trap air and pressurize it.This in power a turbine.

Environmentalists worry about noise pollution from wave machines affecting plants and animals.

Could also disrupt shipping navigation


### Wind power



Wind can be used to drine turbines, which in turn produced electricity UK already has over 1,000 wind turbines.produce 555.8 mega-watts of energy enough to power nearly 400,000 homes. Wind energy is renewable clean and cheap.


But critcs say turbines are an eyesore

### Water power



water is used to drive turbines to produce electricity if generates 20% of the world's power. Campaigners say hydro electricity in greener because water can be stored be hind dams and used to create electricity When needed most.

### Other ways making green energy



Gas produced from rotting rubbish on landfill sites could be use. Experts are also looking at energy crops.

Small scale and domestic solar energy are being developed.

## துணிந்து எழு சிறுவனே!

ஓ......சிறுவனே
ஓ.......சிறுவனே!
சோர்ந்து கிடந்தால்
சிலந்தி வலைகூட
சிறைக்கம்பிகள் தான்!
துணிந் தெழு!
சீனப் பெருஞ்சுவர் கூட
சிறியது தான்

தீயிற்கு வாழ்க்கை பட்டாலும்
விறகு கூட விட்டு வைக்கிறது
அதன் சாம்பலை!
சிறுவனே.....
உனக்குப்பின் உயிர்வாழ
என்ன வைத்திருக்கிறாய்?
ஆரம்பிக்கட்டும் உன் கேள்வித் தீ!

உன்னைச் சுற்றிலும்
எதிர்பார்ப்புக்கள் இருக்கிறது
என்றால் தளராதே
நீ சுறுசுறுப்புடன்
முன்னேறிக்கொண்டு
இருக்கிறாய் என்பது
அதன் அர்த்தம்

ஆக்கம் : இ.நிர்மலரூபன்
சிறுவர் ஊடகத்துறை குழு
யாழ்ப்பாணம்



# தொமஸ் அல்வா எடிசன் (1847 - 1931)

நன்றி : விந்தைகள் செய்த விஞ்ஞானிகள்

தொமஸ் அல்வா எடிசன் ஒரு சிறந்த கண்டு பிடிப்பாளர். உலகம் என்றும் கண்டிராத மிகச்சிறந்த கண்டு பிடிப்பாளர் என்று இவரைக் கூறலாம்.

தானே தன்னை ஆக்கிக் கொண்ட எடிசனின் கண்டு பிடிக்கும் ஆற்றல், 19ம் நுற்றாண்டின் கடைசிப்பகுதியில் உலகத்தின் கவனத்தை அமெரிக்காவின் பக்கம் ஈர்த்தது. மின் யுகத்தின் தலைவன் என அவர் போற்றப்படுகிறார். உலகை ஒளி பெறச் செய்தவர் எடிசன்தான்.



மின்துறையில், எரியும் மின்குமிழை எடிசன் கண்டு பிடித்து அமைத்தார். பன்னல் பதிகருவியையும், இயங்கும் படத்தையும் அவர்தான் கண்டு பிடித்தார். இதனால் அவர் வாழும் போதே முழு உலகமும் அவரை மதித்துப் போற்றியது. பெருமை, புகழ் எல்லாம் வந்து குவிந்த போதும் எடிசன் மனிதத் தன்மைகள் நிறைந்தவராய் எளிமையாய் வாழ்ந்தார்.

தொமஸ் அல்வா எடிசன் மிலான் என்னும் இடத்தில் 1847ம் ஆண்டில் பெப்ருவரி 11ல் பிறந்தவர். தகப்பன் பெயர் சாமுவேல். இவரது குடும்பம் வசதியானது. எடிசன் 11 வயதாயிருக்கும் போது தனது தந்தையின் நிலத்தில் விளையாட்டாகக் காய்கறிச் செடிகள் பயிரிட்டு வளர்த்தார்.

எடிசன் தனது காய்கறிச்செய்கையிலிருந்து வருட மொன்றுக்கு 300 டொலர் சம்பாதித்தார். அதில் அரைப்பங்கை தாயிடம் கொடுத்து விடுவார். மற்ற அரைப்பங்கு பணத்தை தனது பரிசோதனைக்காக இரசானப்பொருட்கள் வாங்குவதற்கு செலவிடுவார். காய்கறி வியாபாரத்தைப் புகையிரதத்தில் சென்றே செய்தார். புகையிரதத்தில் அவர் பத்திரிகை விற்றார். இதனால் இலவசமாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டார்.

புகையிரதத்திலே தனது சொந்தப்பத்திரிகை ஒன்றை அச்சடித்து வெளியிட அவர் தீர்மானித்தார். கையால் இயங்கும் இயந்திரம் ஒன்றை, பொதிகள் ஏற்றிச்செல்லும் பெட்டியில் அமைப்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்டார். அவர் தனது "Grand Trunk Herald" என்ற வாரப்பத்திரிகையை அதில் அடித்து வெளியிட்டார். ஒவ்வொரு வாரமும் 400 பிரதிகள் விற்றன.


பத்திரிகையின் ஆசிரியர், வெளியிடுபவர், அச்சிடுபவர், நிருபர், விற்பவர் எல்லாமே எடிசன் தான், நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்தப் பொதிகள் கொண்டு செல்லும் பெட்டியிலேயே இரசாயனப் பரிசோதனைகளை எடிசன் செய்வார். ஒரு நாள் பரிசோதனை செய்து கொண்டிருக்கும் போது பொசுபரசுத் துண்டொன்றை பெட்டியின் அடியில் போட்டு விட்டார். அதனால் புகையிரம் தீப்பற்றிக் கொண்டது. எஞ்சின் சாரதி, நெருப்பை அணைத்து விட்டு, இரசாயனப் பொருட்களையும் அச்சு இயந்திரத்தையும் வெளியில் எடுத்து வீசி, எடிசனையும் வெளியில் தள்ளினான். தள்ளும் போது எடிசன் காதில் பலமான ஓர் அடியும் கொடுத்தான். இந்த அடி, எடிசனை வாழ்நாள் முழுவதும் ஓரளவு செவிடாக்கியது. இதற்குப்பின்னர் எடிசன் தனது பத்திரிகை தொழிலை விட்டு விட்டார். மின்னியலில் ஆர்வம் செலுத்தத் தொடங்கினார். புகையிரத நிலையத்தில் தந்தித் தொடர்பு எவ்வாறு இயங்குகின்றதென்று அறிவதில் எடிசனுக்கு மிகுந்த ஆசை ஏற்பட்டது. அதனால் தந்தி தொடர்புத் தொழிலில் ஈடுபடுவது அன்று கனவாகவே இருந்தது.

தந்தித் தொடர்புத் தொழிலில் ஈடுபடும் வாய்ப்பு எடிசனுக்கு அதிஷ்டவசமாகவே கிடைத்தது. ஸ்டேசன் மாஸ்டரின் இளம் மகனை எடிசன் புகையிரத விபத்தொன்றில் காப்பாற்றினார். இதனை அறிந்த ஸ்டேசன் மாஸ்டர், எடிசனுக்கு அவருக்கு விருப்பமான தந்தித் தொடர்பாளர் வேலையைக் கொடுத்தார்.

தொடரும்............

# குறுக்கெழுத்துப் போட்டி 3

அன்பார்ந்த சிறுவர்களே! இதனைச் சரியான முறையிற் பூர்த்திசெய்து எதிர்வரும் 2003.10.15 ஆந் திகதிக்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்குஅனுப்பிவைக்கவும். சரியாக நிரப்பி அனுப்பியவர்களில், சீட்டுக்குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர்கள் அடுத்த மாதச் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.




**அனுப்பவேண்டிய முகவரி....**


ஆசிரியர்,
"துளிர்"
குறுக்கெழுத்துப் போட்டி இல.03,
18,குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.

## இடமிருந்து வலம்

1. மகாபாரதத்தில் துரோனரின் மகன்.
6. ஆடவர் காலில் அணியும் ஆபரணம், வீரத்தைக் குறிப்பது.
7. பிழை அல்ல.
9. வலிமை மிக்கவன்.
11. கற்றுக்கொள்/ ஏறவும் உதவும்
12. இராமனின் வம்சம்.
13. திடீரென.
14. சத்தமின்மை.
16. ஐவகை நிலங்களில் ஒன்று.
17. கணவன்-மனைவியை இவ்வாறும் அழைப்பார்கள்.
19. புதினம்
21. துஸ்ட செயல்.
23. கிளியின் குஞ்சு.
24. சந்திரன்.

## மேலிருந்து கீழ்

1. ஆசிரியப்பா.
2. சுழன்றோடும் நீரோட்டம்.
3. அமெரிக்கா, சீனா, ரஷ்யா எல்லாம் இந்த ரகம்.
4. அடிமை/ ஊழியன்/ அன்புமிக்கவன்.
5. சா.
8. விரைவில்
10. பிரித்தல்.
11. கிட.
13. நிகழ்வு.
14. இவை ஓய்வதில்லை.
15. ஓர் அசைச்சொல்.
16. பாதகம் செய்தவள்.
18. எண்பதுகளில் சமாதானப்பேச்சு நடந்தது இங்கு.
20. எலிக்கும் இது தனியாக வேண்டும்.
22. காட்டு மிருகம்/நாட்டைக் கலக்குவது.



தம்பி, தங்கைகளே !
உருவில் உள்ள புள்ளிகளை இணைத்து
படத்தை முழுமைப்படுத்துக.

# ஓவியம் பேசுகின்றது.

இல.06

படத்தினை உற்று நோக்குங்கள் சிந்தனைகள்ள நான்கு வரிக்குள் அழகாக கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதைகள் எமது அடுத்த இதழில் பிரசுரமாகும்.



ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய
இறுதித்திகதி
**15.10.2003.**
அனுப்ப வேண்டிய முகவரி

"துளிர் சஞ்சிகை"
சிறுவர் ஊடகத்துறைக் குழு
18, குமாரசாமி வீதி
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

அனுசரணை :
சிறுவர்பாதுகாப்பு,
146, கோவில் வீதி, வட இலங்கைப்பத்திரிகையபளர் சங்கம்,
நல்லூர், யாழ்ப்பாணம். 18, குமாரசாமி வீதி,கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.